முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1595

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.02.2024**, சனிக்கிழமை

1. தர்மவேலிகொண்ட அரங்கனே
   தவபலமிக்க தேசிகனே
   கர்மவினை போக்கி உலகோரின் கண்டுரைப்பேன்
   கடைத்தேற்றம் அவர்கட்கு அருளவல்ல ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
   ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் தை மாதம் 27 ம் நாள், 10.02.2024, சனிக்கிழமை)
   வானவர்கள் போற்றும் மாதர்மத்தை
   வள்ளலாக வையகத்தில் வாரி வழங்குகின்ற ஞானியே
3. ஞானியே உன் உபதேசம்
   உலகோர்க்கு ஞான சித்தி தரும்
   ஞானியே உன் சித்திமிகு முழுமதி பூஜை எல்லாம்
   நானிலத்தில் நல்வழி காட்டி காத்தருளும்
4. அருளாக அறமாக
   அரங்கன் நீ செய்கின்ற தர்மமே
   இந்த கலியுகத்துக்கு காப்பாகும்
   அன்னதனால் உலகோர் அரங்கன் குடில் தொடர்புகூட்டி
5. அச்சமற அரங்கன் கரம்பட தீட்சை உபதேசம் அடைந்து
   ஐயனே என தொடர்ந்து வர
   மெய்ஞான வாழ்வு பெறுவதோடு
   மேலான இந்த உலகமாற்றத்திலும்
6. பேரற்புதம்பட சேவையாற்றி வரும் மக்களெல்லாம்
   எல்லோரும் அரங்கன் ஆசியாலே
   இயம்பிடுவேன் ஆறுமுகன் என் தயவாலே
   வல்லமைபட ஞானிகளாக மாறி

7. இந்த உலகமாற்றத்தில் பங்கு பெறுவர்
ஆகவே அரங்கன் தொடர்பு கொண்ட மக்களுக்கே
ஆறுமுகன் என் ஆசியும் சித்தியும் உண்டுஉண்டு
அருளிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–